க்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

# ழரசொலி

ஒலி 94 பிரமோதூத மாசி 17
ார்ச் 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## மடு அகதிகள் முகாமை மூடுமாறு பணிப்பு அங்குள்ளவர்களை வவுனியாவுக்கு மாற்றமுயற்சி

மன்னார் மாவட்டம் மடுப்பகுதியில் உள்ள அகதி முகாம்களை மூடுமாறு உத்தர விடப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்று தெரிவித்தார் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இம்முடிவை அறிவித்த அமைச்சர் இம்முகாம்களை மூட ஆவன செய்யுமாறு ஐ. நாவின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் கேட்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார் இம்முகாமில் உள்ள அகதிகள் மன்னார் தீவுக்கோ அல்லது வவுனியாவிற்கோ செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளன. ...04 ஆம் பக்கம் பார்க்க

### ளிநொச்சி மூன்றாம் வாய்க்கால்

# ற்பண்ணை விடுதி மீது

# ர் பொம்மர்த் தாக்குதல்!

## புதுமணத்தம்பதிகள் உட்பட எண்மர் பலி !

(ஸ்தலத்திலிருந்து நமது நிருபர் சந்திரசேகரம்)

ிநொச்சிப் பகுதியில் உள்ள மூன்றாம் வாய்க்கால், பரந்தன், ாள்புரம், குஞ்சுப்பரந்தன் ஆகிய பகுதிகள் நேற்று இருமுறை ர் தாக்குதலுக்கு உள்ளாகின. அரச நெற்பண்ணை ஊழியர் ில் தங்கியிருந்த ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த எட்டுப்பேர் அவ் லேயே உயிரிழந்தனர்; ஆறுபேர் காயமடைந்தனர்.

காலை 7 மணிக்கு ண்டு வீச்சு விமா இத்தாக்குதலை ... மூன்றாம் வாய்க்காலில் உள்ள நெற்பண்ணை மீது வீசப்பட்ட குண்டினால் என். ஆறுமுகம்(45), ஆ. சம லாதேவி(13), ஆ. விஜயலட்சுமி(10), மற்றும் புதுமணத் தம்பதியான மோகன் (27), சித்திரம்மாவும்(25), மு. செல்வம் (67), மு. சித்திரா தேவி(10), சி. உமாதேவி(7) ஆகியோரும் பலியாகினர்.

உமாதேவியின் சகோதரர்களான சி. சிவராசா(17), சி. சிவகுமார்(20), சி. சிவ —04 ஆம் பக்கம் பார்க்க

### கிளிநொச்சி, மன்னாரிலும் மாணவர் கண்டன ஊர்வலம்

அதிபர், ஆசிரி காலை செய்யப் பாடசாலை டம்பெறும் விமா ்களைக் கண்டித் நாச்சி மாவட்ட மாணவர்கள் ஆர்ப்பாட்ட ம் ஒன்றை நடாத்த ார்.

இந்து மகாவித்தியாலயத் தில் இருந்து மத்திய மகா வித்தியாலயம் வரை இவ்வூர் —04 ஆம் பக்கம் பார்க்க

### மன்னார் கொலையைக் கண்டித்து யாழ் நகரிலும் ஊர்வலம்

மன்னார் மாவட்டத்தின் வங்காலையில் 17.02.91 அன்று சிறீலங்கா அரச இராணுவத்தால் மூன்று அதிபர்கள் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக்கண்டித்தும், தமிழ்மாணவர்களின் கல்வி மீதான சிறீலங்கா இனவாதஅரசின்காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளைக் கண்டித்தும் மாணவர்களின் பேரணி இன்று வட மாகாணத்தின் சகல பகுதிகளிலும் நடைபெற உள் —40 ஆம் பக்கம் பார்க்க

### போரினால் வீடுகளை இழந்தவர்களுக்கு லட்சத்து 50 ஆயிரம் டாலர் உதவி

க்குக் கிழக்கில் இரா நடவடிக்கைகளினால் ளை இழந்தவர்களுக்கு வ அவுஸ்திரேலிய அரசு லட்சத்து 50 ஆயிரம் டாலர் நிதியுதவியை அளிக் ும் என அவுஸ்திரேலிய வெளிவிவகார வர்த்தக பதில் அமைச்சர் நீல்ப்லெவெட் தெரிவித்துள்ளார்,

இலங்கையில் பணிபுரியும் அவுஸ்திரேலிய மற்றும் சர்வதேச, உள்நாட்டு அமைப்புக் —04 ஆம் பக்கம் பார்க்க

### அமெரிக்க வைத்திய உபகரணங்கள் எடுத்துவர கடைசி நேரம் மறுப்பு

யாழ் மருத்துவமனைக்கும், கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் அமெரிக்காவால் அன்பளிப்பு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் எடுத்து வர கடைசி நேரத்தில் கொழும்பில் கூட்டுப் படைத் தலைமையகம் மறுத்துள்ளது.

இவ் உபகரணத்துடன் யாழ் செஞ்சிலுவைப்பிரிவுக்கு வெளிநாட்டு உதவியாகக்கிடைத்த வானொலி தொடர்புசாதனமும் யாழ் எடுத்து வர கூட்டுப் படை தலைமையகம் கடைசி நேரத்தில் அனுமதி மறுத்துள்ளது (74)

### பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள் லஞ்ச வலையில் சிக்கியுள்ளனர்

ாதுசன தொடர்புடைய வாகு ஸ்தாபனங்களி லஞ்சமும் ஊழலும் ிரோத நடவடிக்கைக ருந்றியுள்ளன என ணையாளர் திணைக் அறிவித்துள்ளது.

அரச ஊழியர் மீது குற்றச்சாட்டு விசார நடைபெறுகிறது. இவர் 500பேர் பொலிஸார் விசேட புலனாய்வுப் பகுதியைச்சேர்ந்த உயரதிகாரிகளே இதில் கூடுதலாக அகப்பட்டுள்ளனர்.

### ஏப்ரலில் க. பொ. த. பரீட்சைகள்

வடக்கு கிழக்குப் பகுதிகளில் தடைப்பட்ட க. பொ. த் சாதாரண தரப் பரீட்சை க. பொ. த. உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22-ம் திகதி முதல் மே மாதம் 15-ம் திகதி வரை நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## வளைகுடாப் போர் நிறுத்தம்!

வளைகுடாப் போர் நிறுத்தப்பட்டுவிட்டது. இதற்கான உத்தரவை நேற்றுக்காலை அமெரிக்க ஜனாதிபதி புஷ் வெளியிட்டார். கடந்த ஆறு வாரங்களாக நடைபெற்ற வளைகுடா யுத்தத்தில், நூறு மணிநேர தரைப்போரைத் தொடர்ந்து இந்த யுத்த நிறுத்தம் அமுலாகிறது இலங்கை நேரப்படி நேற்றுக்காலை 10. 30 மணிக்கு யுத்தக் களத்தின் எல்லா முனையிலும் அமெரிக்க நேசப் படைகள் தாக்குதலை நிறுத்திக் கொண்டன.

ஜனாதிபதி புஷ்ஷின் அறிவிப்பு வெளியாகி முப்பது நிமிட நேரத்தில் வளைகுடாப் —04 ஆம் பக்கம் பார்க்க

### ஈராக்கின் புனர் நிர்மாணம் சோவியத், ஜேர்மனி உதவும்

வளைகுடாவில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டமை சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு கிடைத்த வெற்றியாகும் என சோவியத் பாராளுமன்ற சபாநாயகர் லிக்னயோவ் தெரிவித்தார்.

இதே சமயம் போரினால் உருக்குலைந்துள்ள ஈராக்கின் புனர் நிர்மாணத்திற்கு சோவியத் யூனியனும், ஜேர்மனியும் உதவியளிக்க முன்வந்துள்ளன.

### பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸாகும்

வளைகுடாப்போர் முடிந்து விட்டமையால் இனிமேல் அங்கு பிரிட்டிஷ் துருப்புகள் தரித்து நிற்கமாட்டா. அவை விரைவில் நாடு திரும்பும் எனப் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் உறுதியளித்துள்ளார்.

வளைகுடாவில் ஐ. நாவின் அமைதி காக்கும் படையில் பிரிட்டிஷ் துருப்புகள் இடம்பெறும் எண்ணமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

### இறுதியாக நடந்த டாங்கி யுத்தம் மேற்குலகு இருட்டடிப்பு

வளைகுடாப் போர் நிறுத்தப்படுவதற்கு முன்பாக ஈராக்கின் தென் பகுதியிலும் நசாரியா நகரிலும் நடைபெற்ற டாங்கிகளின் யுத்தம் குறித்த செய்திகளை மேற்குலக செய்திகள் இருட்டடிப்புச் செய்துள்ளன. ஈராக்கிய கவசப் படையின் டாங்கிகளும் —04ஆம் பக்கம் பார்க்க

### நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கு அமெரிக்காவின் நிபந்தனைகள்

ஈராக்கிற்கு எதிரான தற்போதைய யுத்த நிறுத்தத்தை நிரந்தர யுத்த நிறுத்தமாக்குவதற்கு அமெரிக்க அரசு ஈராக்கிற்கு கடும் நிபந்தனைகளை விதித்துள்ளது. சகல யுத்தக் கைதிகளையும், குவைத்திய பிரஜைகளையும் ஈராக் விடுவிக்கவேண்டும். தரைக் கண்ணி —04 ஆம் பக்கம் பார்க்க

### அழிந்த நிலையில் குவைத் நகர்

குவைத் மீட்கப்பட்டு விட்ட போதிலும் அந் நகர் பெரும் அழிவடைந்த நிலையிலேயே காணப்படுகிறது. வீதிகள் எங்கும் கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. கடைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. பல ஹோட்டல்களில் துப்பாக்கிச் சூட்டு அடையாளங்கள் —04 ஆம் பக்கம் பார்க்க

தலைவரும் சுட்டுக்கொல்லப்பட்டார்

### மொனராகலை காட்டில் 18 ஜே. வி. பியினர் கைது

மொனராகலைப் பகுதியில் ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்த 18 பேர் கைதான தாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார் —04 ஆம் பக்கம் பார்க்க

### வடக்குக் கிழக்குப் பகுதிக்கு 40 டாக்டர்களே நியமனம்

சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள 395 டாக்டர்களில் யாழ்போதனா வைத்தியசாலைக்கு 28 டாக்டர்களும் மட்டக்களப்பு போதனாவைத்தியசாலைக்கு 12 டாக்டர்களும் நியமனம் பெற்றுள்ளனர் இவர்கள் இன்று முதல் சேவையில் ஈடு —04 ஆம் பக்கம் பார்க்க

# செய்திச் சிதறல்

### அம்பலமான ஊழல்கள்

361. கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த க. பொன்னம்பலம் என்னும் வியாபாரி ஒரு பக்கட் லக்ரோஜின் பால்மாவை நிர்ணய விலையிலும் 13 ரூபா கூடுதலாக விற்கும் போது விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி ஊழல் தடுப்புப் பிரிவினரிடம் கையும், மெய்யுமாகப் பிடிபட்டுத் தான் செய்த குற்றத்தை ஏற்றுக் கொண்டு வட கிழக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திற்கு ரூபா 3000/- குற்றப் பணமாக வழங்கியுள்ளார்.

★ ★ ★

சுப்பிரமணியம் வீதி அரியாலையைச் சேர்ந்த மு. ஐயாத்துரை கடந்த 28 ஆண்டுகளாகக் கிராம சேவை அலுவலராகக் கடமையாற்றி வருபவர். ஏறக்குறைய 14 வருடங்களுக்கு மேலாகப் பொதுமக்களுக்கு ஒரு கிராம சேவையாளர் தன் பணியாகக் கொண்டு வழங்கவேண்டிய நற்சான்றுப் பத்திரங்களை 100 முதல் 150 ரூபா பணம் பெற்றுக் கொடுத்து வந்தமை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் ஊழற் தடுப்புப் பிரிவாற் கையும், மெய்யுமாகப் பிடிபட்டுள்ளது. இவ் வூழல் விசாரணையின்போது கடந்த காலங்களில் வெளிநாடு செல்ல எத்தனிப்போர், வேலைவாய்ப்புகளுக்காக முயன்றோர் ஆகியவர்களுக்குப் பணம் பெற்றே இச்சான்றிதழ் வழங்கியதையும், இது பெருந்தவறென்பதையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

தன் மகன் ஒல்லாந்துக்கு 6 வருடங்களுக்கு முன்னரே சென்று வெளிநாட்டு வருவாய் ஈட்டுவதாயும், மகன் சுவிற்சலாந்திலுள்ள ஒருவரை மணம்முடிக்கச் சுவிற்சர்லாந்து பயணமாவதற்காகக் கொழும்பிற் சென்று தங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இத்தகைய வசதி படைத்த ஒருவர் தன் அலுவலகக் கடமைக்காகக் கையூட்டுப் பெற்ற குற்றத்திற்காக வடக்குக் கிழக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துக்கு ரூபா 50,000 செலுத்தியுள்ளார். இப்பணம் பாதிக்கப்பட்ட மக்களின் சேவைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது. (71)

### மதியஉணவுமுத்திரை வழங்கப்படுகிறது

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு முத்திரைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய மதிய உணவு முத்திரைகளே தற்போது வழங்கப்பட்டுவருகின்றன.

பாடசாலை மாணவர்களின் வந்த நாட்களுக்கு மட்டுமே மூன்றுரூபா பெறுமதியானமுத்திரைகள் வழங்கப்பட்டுள்ளமையும்குறிப்பிடத்தக்கது. 43

### தபால் ஊழியர்க்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாண மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எல்லைக்குட்பட்ட சகல அஞ்சல் அலுவலகங்களின்செயற்பாடுகளையும் சீராக்கி, பொதுச்சேவையினை, நெருக்கடிகளின் மத்தியிலும் தடங்கலின்றி நிறைவேற்ற, வேண்டிய ஆலோசனைகளைப் பெறும் பொருட்டுபொறுப்பு அஞ்சல் அதிபர்கள், மேற்பார்வை உத்தியோகத்தர்கள், உதவியாளர்கள், உப அஞ்சல் அதிபர்கள், சிற்றூழியர்கள் அனைவரையும் 2-ம் திகதி சனிக்கிழமை யாழ் பிரதம அஞ்சலகத்திற்கு வருகை தருமாறு யாழ் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அறிவித்துள்ளார். (33)

### பரு. வங்கியில் கொடுப்பனவு

பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளையில் உற்பத்தித் திறன் நன்கொடையான நாலாயிரம் ரூபா நாளை இரண்டாம் திகதி சனிக்கிழமை வழங்கப்பட உள்ளது.

இக்கொடுப்பனவுகள் வங்கிக் காசோலையாக வழங்கப் படவுள்ளதாகவும் நிவாரணம் பெறவருபவர்கள் அடையாள அட்டையையும் குடும்ப அட்டையையும் கொண்டுவரும்படி முகாமையாளர்கேட்டுள்ளார்.

வடமராட்சிக் கிழக்கைச் சேர்ந்த மருதங்கேணி, குடத்தனை, குடத்தனை கரையூர், கெருடாவில், கிராமசேவையாளர் பகுதிகளைச் சேர்ந்தோருக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.(43,50)

### காய்கறிச் செய்கை; 'கெயர்' உதவும்

யாழ் மாவட்டத்தில் தானிய வகைகள், மரக்கறி வகைகள் என்பன எதிர்வரும் போகத்தில் பெருமளவில் பயிரிட கெயர் ஸ்தாபனம் ஐக்கிய நாணய சங்கங்கள் ஊடாக விவசாயிகளுக்கு உதவி வழங்கவுள்ளது.

தானிய, மரக்கறி வகைகள் பயிரிடும் விவசாயிகளுக்குத் தேவையான உர வகைகள், நீர் இறைக்கமண்ணெண்ணை, நீரிறைக்கும் இயந்திரங்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளன. (50)

### அவுஸ்திரேலியா நிதிஉதவி

இலங்கையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் 'சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கு அவுஸ்திரேலியா 50 ஆயிரம் டாலர் நிதியுதவியை வழங்கும்.

இத் தகவலை அவுஸ்திரேலிய வெளிவிவகார வர்த்தக பதில் அமைச்சர் நீல்ப் லெவெட் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரினால் பாதிப்புறும் மக்களுக்கு இவ் நிதி மூலம் நிவாரணம் வழங்க வேண்டுமென அவுஸ்திரேலியா கேட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (70)

## அன்னையர்முன்னணிக்குப் போட்டியாக - தெற்கில் அரசு உருவாக்குகிறது போட்டி முன்னணி!

தென் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட அன்னையர் முன்னணி அரசுக்குப் பலத்த தாக்கத்தை உள் நாட்டிலும், சர்வதேச அரங்கிலும் ஏற்படுத்தி வருவதால் அதன் வளர்ச்சியை ஆரம்பத்திலேயே நசுக்கிவிடும் நோக்கில், அதற்குப் போட்டியாக 'ஐக்கிய தேசியக் கட்சி அன்னையர் முன்னணி' என்ற ஒரு புதிய அமைப்பை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அரசு உருவாக்க முற்பட்டுள்ள இப் புதிய அமைப்பில் ஜே. வி பி யினாலும் மற்றும் அரசுக்கெதிரான தீவிரவாத செயல்களினாலும் பாதிக்கப்பட்டவர்களின் அன்னையர்கள் அங்கம் பெறுவர் எனவும் இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் 8ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.

### போராட முன்வராது ஆசிரியர்ஒதுங்கலாமா?

"'கொடுமை சண்டு மாணவர்களே சிறி யெழுந்து போராட முன்வருகின்ற வேளையில் ஆசிரியர்களில் அநேகர் ஒதுங்குவதால் நாளைய வரலாறு இவர்களை எள்ளி நகையாடி களங்கமானதொரு நிலையில் கணிக்கலாம். இந்நிலையினைத் தவிர்க்க போராட்டங்களுக்குக் கை கொடுத்து முனைப்புடன் போராட முன்வருவார்களா?''

கோப்பாய்—பலாலி பயிற்சி ஆசிரியர் ஒன்றியம் 'நாளைய மாணவர் எழுச்சியில் ஆசிரியர்களின் நிலைப்பாடு' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு வினா எழுப்பியுள்ளது.


யாழ் பல்கலைக்கழகம்

தொழிலாளர் கல்விப் பாடநெறி

மேற்படி பாடநெறிக்கு விண்ணப்பம் கோரி ஏற்கெனவே வெளியாகியுள்ளவிளம்பரம்தொடர்பாக அறிவிக்கப்படுவது-

இப்பாடநெறியைப் பயின்று சித்திபெய்தும் தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் கல்விச் சான்றிதழ்யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்.

பதிவாளர்

03003

சிறு விளம்பரம்

விற்பனைக்கு

மில்க்வைற் சுத்தமான வேப்பெண்ணெய் விளக்கெரிக்க மருத்துவ பாவனைக்கு திரவ சவர்க்காரம் (Liquid Soap) துகித, சிக்கனமான சலவைக்கு. சகல ப. நோ. கூ. சங்கங்களிலும், கடைகளிலும் விற்பனையாகிறது.

03001

தாதிப் பயிற்சி நெறி

Diploma in Nursing

விண்ணப்பத் திகதி 10. 03. 91 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

1. 1½ வருட காலப் பயிற்சி நெறி.
2. சர்வதேசத் தகைமையுடைய சான்றிதழ்
3. அரசினர் வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சிகள்.
4. அரச தொழில் வாய்ப்புக்கு ஏற்புடையது.

விபரங்கட்கு:-

அதிபர்

சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 6, பருத்தித்துறை வீதி,
(முதலாம் ஒழுங்கை, மக் ரவல்ஸ் அருகில்,)
யாழ்நகர். 03002


## 4 ஆம் ஆண்டு இதய அஞ்சலி



தாயின் மடியில்:
17 - 02 - 1971

ஆண்டவனின் அகாலப் பறிப்பு:
14 - 02 - 1987

திதி: 01 - 03 - 1991

### செல்வி பத்மராஜன் திவ்விய சொரூபினி

கைதடி வடக்கு பத்மராஜன் - பரிமளாதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், உடுவில் மகளிர் கல்லூரி 1987 ஆம் ஆண்டு, 10 ஆம் வகுப்பு மாணவியுமான செல்வி ப. திவ்வியசொரூபினி (செல்லம் - திவ்யா)

''எங்கள் அன்பின் செல்வமே! அழித்தெழுதாச் சித்திரமே! ஆடிவரும் பொன்விளக்கே! நீவிர் எங்களை விட்டு மறைந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும் நின் நினைவு எங்கள் மனதை விட்டு மறைந்திடுமா! நின் ஆன்மா சாந்தி பெற இன்றும், என்றும் அந்த ஆற்றங்கரையானையும், மற்றும் சகல தெய்வங்களையும் பிரார்த்திக்கிறோம்.''

நின் பிரிவால் ஆறாத்துயருறும்:

தந்தை, தாய், தங்கைகள் அனித்தா, ஜீவகி, அப்பப்பா (பொ - பத்மநாதன்), பேரன், பேத்தி, மாமன்மார், மாமிமார், சிற்றன்னைமார், ஆசையப்பா - ப. பரராசன் (பரா - கிறிஸ்), சித்தப்பா (ப. யாலேந்திரன்), குஞ்சப்பா (ப. பாலச்சந்திரன் இந்தி- ஜேர்மனி), மற்றும் சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள், நண்பிகள்.

மானார் வளவு,
கைதடி தெற்கு,
கைதடி.

01 - 03 - 1991

03006

## 'வட, கிழக்கில் தொடரும் உயிராபத்து நிலை' வத்திக்கான் பத்திரிகை வெளியிடும் செய்தி

இன்று இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்கள் முன்னெப்போதிலும் இல்லாத வகையில் பெரும் உயிராபத்துக்களையும் மற்றும் துன்பங்களையும் தொடர்ந்து எதிர்நோக்கி வருவதாக திருமலை—மட்டுநகர் ஆயர் பேரருள் திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்துள்ளதாக வத்திக்கானில் இருந்து வெளிவரும் சர்வதேசம் மெங்கும் அனுப்பப்படும் 'ஒஸ்ஸ வாத்தோறே றோமானே' என்ற ஆங்கில பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'வடக்கு கிழக்குப் பகுதிகளில் உயிரிழப்பு, பொருளிழப்பு, தடுத்துவைப்பு, பசி, பஞ்சம், நோயாளருக்கு வைத்திய உதவியின்மை போன்றவற்றால் இப்பகுதிகளிலுள்ள மக்கள் என்றுமில்லாத பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.'

'இலட்சக் கணக்கான மக்கள் வீடுகளுக்குத் திரும்பும் நம்பிக்கையின்றி அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்' என இப் பத்திரிகை இலங்கை விடயம் பற்றி தொடர்ந்து எழுதியுள்ளது. (16)

## இந்தியத் தூதுவர் பேட்டி.....

(நேற்றைய தொடர்ச்சி)

கே: ஐரோப்பிய பாராளுமன்றக் குழு இலங்கைக்கு சமீபத்தில் விஜயம் செய்துள்ள போது மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கேள்வி எழுப்பியுள்ளதே?

ப: ஒரு நாட்டுத் தூதுவர் என்ற ரீதியில் உள்நாட்டில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக என்னால் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாது. ஆனால் வட கிழக்கின் விதம்பித நிலை குறித்து இந்தியா அக்கறை கொள்வதற்கு முடியும். ஏனெனில் வட, கிழக்கு நிலைப்பாடு தொடர்பாக 1987 இலங்கைக்கும்— இந்தியாவிற்கும் இடையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

கே: சில தினங்களுக்கு முன்பு இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன, சுவிஸ் அதிகாரப் பகிர்வு முறை பற்றி குறிப்பிட்டிருந்தாரே?

ப: அவர் "கன்ரோன்" அமைப்பு முறை பற்றிக் கூறியிருந்தார். இரண்டு மூன்று இன குழுக்களுக்கு மேல் இருக்கும் நாட்டிற்கு அது அதிகளவு பொருத்தமுடையது எனக் கூறமுடியாது. சுவிற்சர்லாந்தில் ஜேர்மனியக் குழு பிரெஞ் குழு, இத்தாலியக் குழு என்பன பெரும்பான்மைக் குழுக்களாக உள்ளன. ஏனையவை மிகவும் சொற்பளவில் காணப்படுகின்றன. பிரதான பகுதிகளை பெரும்பான்மைக் குழுக்கள் உள்ளடக்கியிருப்பதால் ஒப்பீட்டுரீதியாக மற்றைய குழுக்கள் பிரச்சினைகளையும் எதிர்நோக்காமல் இல்லை.

கே: விடுதலைப் புலிகளின் தலைவரில் ஒருவரான மாத்தயா கூறிய அமைச்சர் சுக்லாவின் விஜயத்தின் பின்பு இந்தியா தமிழர் பிரச்சினைகளில் இருந்து விலகி இலங்கை அரசுக்கு சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதான கருத்தில் "இந்து" பத்திரிகைக்கு தெரிவித்துள்ளாரே?

ப: ஆனால் அமைச்சர் அரசியல் தீர்வு குறித்தே வலியுறுத்தியுள்ளார் 13-வது அரசியலமைப்பு சீர்திருத்தம் என்பது இலங்கையின் அரசியல் அமைப்பு வரையறைக்குள் உட்பட்டது அது எமது அரசியல் அமைப்பு அல்ல. மற்றையது இடைக்கால மாகாணசபை அமைப்பு என்பதாகும். இது தொடர்பான ஒரே விடயத்தைத் தான் வெவ்வேறு வார்த்தைகளில் கூறப்பட்டிருக்கின்றது.

கே: மாகாணசபை நிர்வாகம் குறித்து தமிழ்க்குழுக்கள் இணைந்து அமைச்சர் சுக்லாவிடம் ஆலோசனை சமர்ப்பித்தனவே?

ப: இந்தியா, இலங்கைக்கு பழைய நட்பு நாடு என்ற ரீதியில் ஆலோசனைகளையே வழங்க முடியும். அதாவது உதவி என்ற மட்டத்திலேயே அத்தகைய முயற்சிகளையே இந்தியா மேற்கொள்ளலாம். ஆனால் அப் பிரச்சினைகளில் ஈடுபடுவதென்பது வேறானது.

கே: மன்னாரில் எண்ணெய் அகழ்வு, மற்றும் வேறு விடயங்கள் குறித்து இருநாடுகளிற்கும் இடையில் இணக்கப்பாடுகள் ஏற்பட்டுள்ளதா?

ப: இருநாடுகளின் இணைப்பு குழுவே இவ் விவகாரங்கள் குறித்து கையாளுகின்றது மன்னாரில் இடம்பெறும் வேலைகள் குறித்து ஆய்வு நடவடிக்கைகள் இந்நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் என நினைக்கின்றேன்.

கே: வவுனியா, மட்டக்களப்பு மற்றும் தமிழ் பகுதிகளின் சமீபத்தைய குடிமக்களது இழப்புகள் குறித்து கூற முடியுமா?

ப: ஐந்து, ஆறு வாரங்களாக யுத்த நிறுத்தத்திற்கு பின்பு இந் நிலையைக் காணமுடிகிறது. முதலிலேயே அரசியல் ரீதியான முட்டுக்கட்டை நிலைமை பற்றி கூறியிருந்தேன். அந்நிலையிலேயே அமைதிக்கான எந்தவொரு முன்னேற்றத்தையும் எட்ட முடியாமல் இருக்கின்றது.

### தமிழ்த்தொழிலாளர் வீடுகள் தீக்கிரை

தலவாக்கொல்லை — மடக்கும்பர புதுக்காடு தோட்டத்தில் உள்ள தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் குடியிருந்த 20 வீடுகள் எரிந்து சாம்பராகியுள்ளன.

இதனால் இவ்வீடுகளில் குடியிருந்த 85 பேர் மேற்படி தோட்டத்தில் உள்ள பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இக்குடிசைகள் எவ்வாறு தீப்பற்றின என்பது குறித்து உடனடியாக எதுவும் அறியப்படவில்லை.

## ஆஸி.எம்.பிக்கள் தமிழர்பிரச்சினையில் அதிக ஆர்வம்!

## 'உலக அரங்கில்மேலும் வெளிப்படுத்தவும்வாய்ப்புண்டு'

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் அக்கறை கொண்டுள்ளதாகவும் கன்பெரா நகரில் நடைபெறவுள்ள உலகத் திருச்சபை மகாநாட்டில் இவ் இனப்பிரச்சினைக்கு தமிழர் சார்பு ஆதரவை திரட்டுவதற்கும், சர்வதேச அரங்கில் உண்மைநிலையை வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்புண்டென்றும் அவுஸ்திரேலிய மனித உரிமைக் கழகத் தலைவர் திரு. லென்றீட் தெரிவித்துள்ளார்

மேற்படி இனப்பிரச்சினையின் உண்மை நிலையை மேலும் அறிந்துகொள்ளக் கூடிய தகவல்களைப் பெறுவதிலும் அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

உலகத் திருச்சபை மகாநாடு நடைபெறும் காலகட்டத்தில் அதன் கவனத்தை மேலும் ஈர்க்கக் கூடியதாக இலங்கையில் செயறபாடுகள் அமைதல் நலன் தரும் எனவும் அவர் மேலும் கருத்து வெளியிட்டுள்ளார்.

## குண்டுதுளைத்த நிலையில்படகு ஒதுங்கியது! ஒருவர் தப்பினார்; மூவர்நிலை மர்மம்!!

கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி கிழக்குக் கடற்பிரதேசத்தில் கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளான படகு செம்பியன்பற்றில் கரை ஒதுங்கியுள்ளது. இப்படகில் ஐம்பதிற்கு மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இப்படகில் சென்ற உடுத்துறையைச் சேர்ந்த நான்கு குடும்பஸ்தவர்களில் ஒருவரான பஞ்சலிங்கம் (33) என்பவர் நீந்திக்கரை சேர்ந்துள்ளார். ஏனைய மூன்று பேரினதும் நிலைமை என்னவென்று தெரியவில்லை. (43)

### வெண்கட்டிக்கும் தட்டுப்பாடு

வடமராட்சிப் பாடசாலைகளில் வெண்கட்டிக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகப் பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (43)

## வடமராட்சி கிழக்கு கடல் பகுதியில் 8 மாதங்களில் 10 பேர் மர்ம மறைவு!

கடந்த யூன் மாதத்திற்குப் பின்னர்வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த பத்துப் பேர் கடலில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுக்காணாமல் போயுள்ளனர்.

இவர்களில் எட்டுப்பேர் குடும்பஸ்தவர்கள் ஆவர், இவர்கள் பலாலி இராணுவ முகாமில் இருப்பதாக கூறப்பட்டபோதிலும் இன்னும் சரியான தகவல் கிடைக்கவில்லை என்று இவர்களின் உறவினர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு காணாமல் போனோர் அனைவரும் உடுத்துறையைச் சேர்ந்தவர்களாவர். (43)

## 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வட, கிழக்கில் மார்ச் 30 இல் நடக்கும்

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் விசேட பரீட்சை மார்ச் மாதம் 30 ஆம் திகதி நடாத்தப்படவுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி நாடு முழுவதும் நடாத்தப்பட்ட இப் பரீட்சை தமிழ்ப்பகுதிகளில் தடைப்பட்டிருந்தது

வடக்கு. கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மாணவர்களுக்கென கொழும்பு, புத்தளம், அனுராதபுரம், பொலநறுவைப் பகுதிகளிலும் இப் பரீட்சைக்கென விசேட பரீட்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. (33)

### 'கலை இளவல்' பட்டமளிப்பு

யாழ் இந்துக் கல்லூரி சாரணர் குழு துருப்புத் தலைவர் செல்வன் கோபாலகிருஸ்ணன் சத்தியனுக்குக் 'கலை இளவல்' என்ற பட்டத்தை யாழ் இந்துக்கல்லூரி வழங்கிக் கௌரவித்துள்ளது.

## மூன்றுவருட தொலைக் கல்விப் பயிற்சியில் தேறும் பயிலுநர்க்கே நிரந்தர நியமனம்!

சகல பயிலுநர் ஆசிரியர்களுக்குமான மூன்றுவருட தொலைக்கல்வி பயிற்சிநெறி நாடுமுழுவதும் அடுத்த சில வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது

கடந்த வருடம் அக்டோபர் மாதம் 30-ம் திகதிக்கு முன் நியமனம் பெற்ற சகல பயிலுநர் ஆசிரியர்களும் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

மூன்றுவருட தொலைக்கல்விப் பயிற்சியின் பின்னர் கல்வி அமைச்சு நடாத்தும் பரீட்சையில் சித்தியடைந்தால் மட்டுமே இவர்களுக்கு நிரந்தர நியமனமும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான சம்பளமும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

### கம்பன் கோட்டத்தில் நினைவுப் பேருரை

அமரர் பொ. ச. குமாரசாமி அவர்களின் நினைவுப் பேருரை (II) 3 ஆம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு நல்லூர் கம்பன்கோட்டத்தில் இடம்பெறவுள்ளது.

## வட, கிழக்கு நியமனக் கோட்டாவிலும் சிங்கள ஊழியருக்கே அதிக இடம்?

வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் கணிசமான அளவில் அரச நியமனங்களை வழங்குவதற்கு 'விகிதாசார நியமனம்' என்ற போர்வையில் அரசு புதிய திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது

அரசின் இப் புதிய திட்டத்தின்படி மாவட்டங்களில் ஒரு குறித்த சமூகமொன்றிற்கு விகிதாசார அடிப்படையில் நியமனம் வழங்கப் போதிய விண்ணப்பங்கள் கிடைக்காத விடத்தும் அம் மாவட்டங்களுக்கு அப்பாலுள்ள பிற மாவட்டங்களில் இருந்து அச் சமூகத்திற்குரிய விண்ணப்ப ரீதியிலான நியமனங்களை வழங்க வழிகோலப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் நியமனம் பெறுவோர் குறித்த மாவட்டத்தில் கடமை புரிவது சூழ் நிலை காரணமாகச் சாத்தியமாகாத பட்சத்தில் ஏற்புடைய வேறுமாவட்டங்களில் கடமைபுரியவும் வாய்ப்பளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்ப் பகுதிகளில் தமிழர்களுக்கு விகிதாசார அடிப்படையில் கிடைக்கும் நியமனங்களையும் இத் திட்டம் பாதிக்கச் செய்து பெரும்பான்மைச் சமூகத்தினரின் நியமன எண்ணிக்கையை அதிகரிக்கவே இத் திட்டம் உதவும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

### சம்பளக் கட்டுநிதி வந்து சேர்ந்தது

யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கும், கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கும் இம் மாதச் சம்பளத்தை வழங்குவதற்கு வேண்டிய 6.7 மில்லியன் ரூபா கட்டு நிதி நேற்று வந்து சேர்ந்தது.

பெப்ரவரி மாதத்துக்குரிய ஆசிரிய சம்பளம் இன்று வழங்கப்பட உள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. இம் மாதச் சம்பளத்துடன் ஆசிரியர்களுக்கு 500 ரூபா விசேட சம்பள முற்பணம் வழங்கப்பட உள்ளது. (ப-17)

## கலை கலாசாரப் பிரிவினர் நடாத்தும் 10 நாள் முத்தமிழ் விழா

தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினர் நடாத்தும் முத்தமிழ் விழா வெகு விமரிசையாக எதிர்வரும் ஏப்ரல் 6-ம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பத்து நாள்கள் கொண்டாடப்பட இருக்கின்றது.

இம் முத்தமிழ் விழாவில் பங்கு கொள்ள விரும்பும் இசை, நடன, நாடகக் கலைஞர்கள் எதிர்வரும் 10.03.91க்கு முன்பதாக விண்ணப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

நடன நிகழ்வில் பரதம், கதகளி, உழவர் நடனம், மீனவர் நடனம், கும்மி, கோலாட்டம், கரகம், காவடி என பல்வேறு வகைப்பட்டதாகவும், இவை ஒவ்வொன்றும் 7 நிமிடங்களுக்கு மேற்படாததாகவும், நாட்டிய நாடகம் 45 நிமிடங்களுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

சமூக மேம்பாடு, போராட்டச் சிந்தனைகள் மூலம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பணியை ஆதாரமாகக் கொண்ட கதைகள், கற்பனைகள் மூலம் உருவாகும் பாடல்களுக்கு அமைவாக நடன, நாட்டிய, நாடக நிகழ்வுகள் இருப்பது விரும்பத்தக்கது.

நாடகங்கள் இசை நாடகங்களாகவும், கூத்து வகைப்பட்டதாகவும், நவீன நாடகங்களாகவும், வரலாற்று நாடகங்களாகவும் அமையலாம். நாடகங்கள் 30 நிமிடம் தொடங்கி 45 நிமிடம் வரையில் நடைபெறும் விதத்திலும், ஒரு மணி நேர நாடகமாகவும் இரு பிரிவாக இடம் பெறலாம்.

யாழ் மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த கலைஞர்கள் தத்தம் மாவட்ட மக்கள் முன்னணிச் செயலகங்கள் மூலம் அனுப்பி வைக்கலாம். தெரிவு செய்யப்படும் நிகழ்ச்சிகளுக்கு பிரயாண வசதிகளுடன் அனைத்து உதவிகளும் வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளில் பங்கேற்க விரும்பும் கலைஞர்கள் தமது விண்ணப்பங்கள் மற்றும் பிரதிகளை முத்தமிழ் விழாப் பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவு, கோண்டாவில், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

## தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்கு முன்பாக
# இந்தியாவில் உள்ள அகதிகளை ஏற்றுக் கொள்ளவே மடுவில் உள்ள அகதி முகாம் மூடப்படுகிறது

இந்தியாவில் உள்ள அகதிகளை வெகுவிரைவில் மன்னாரிலும், வவுனியாவிலும் குடியமர்த்துவதற்காகவே அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயத்தால் பராமரிக்கப்பட்ட மடு அகதி முகாம் மூடப்படுவதற்கு காரணம் என நம்பதகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

மேலும் இந்தியாவில் தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடைபெற முன்னதாக தமிழ்நாட்டில் தங்கியுள்ள தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப இந்தியா திட்டமிட்டுள்ளது எனவும் தெரியவருகிறது.

இதற்கு துணை போவதாகவே சிறிலங்கா அரசு மடு அகதி முகாமை மூடிவிடுவதென தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (74

## நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து 8 தமிழருக்கு சுங்க இயக்குநர் பதவி

சுங்கத்திணைக்களத்தில் பதினேழு சிரேஷ்ட சுங்க அதிகாரிகள் பிரதி சுங்க இயக்குநர்களாக பதவியுயர்வு பெற்றனர்.

சுங்கத்திணைக்களத்தில் இப் பதவியுயர்வுகளின் பாரபட்சம் காட்டப்படுவதால் தனது பதவியுயர்வு புறக்கணிக்கப்பட்டதாக சுங்க அதிகாரி இராமுப்பிள்ளை மனித உரிமை மீறல் மனுவொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். அதில் அவருக்கு சாதகமான தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்தே இந்த எட்டுத்தமிழர்களுக்கும் பதவியுயர்வு கிடைத்துள்ளது. (38)

## யாழ் உதவி அரச அதிபர் பிரிவில் 26 பாடசாலைகளுக்கு உணவு முத்திரை

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 32 பாடசாலைகளில் 26 பாடசாலைகளுக்கு மதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

உதவி அரசாங்க அதிபர் க. சபாபதிப்பிள்ளை இவற்றைப் பாடசாலை அதிபர்களிடம் வழங்கினார்.

இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இவை கிடைத்துள்ளன.

பாடசாலைகளுக்கு அருகில் உள்ள கூட்டுறவுக் கடைகள் மூலம் உள்ளூர் உற்பத்தி உணவுப்பொருள்கள் இம் முறை கொடுக்கப்படும் (33))

## அரச ஊழியர்களின் சொத்து விவரம் லஞ்சப் பகுதியால் விசாரணை

300 அரசாங்க ஊழியர்களின் சொத்துக்களின் விவரங்கள் தொடர்பாக லஞ்ச ஆணையாளர் திணைக்களம் விசாரணை நடாத்திவருகிறது.

இவர்களில் பெரும்பாலானோர் சுங்கத்திணைக்களம்; குடிவரவு குடியகல்வு, கல்விப் பகுதி என்பனவற்றைச் சேர்ந்தவர்களாம். தமது சொத்து விவரங்களை வெளியிடாத மேல்மாகாணசபை உறுப்பினர்கள் இருவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (33)

## பரீட்சை முடிவுகளின் படி எழுதுவினைஞர் நியமனம்

கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற எழுதுவினைஞர் சேவை மற்றும் அதனுடன் இணைந்த துறைகளுக்குமான பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

பொது நிர்வாக அமைச்சர் பெஸ்டல் பெரேரா இது குறித்து தமது அமைச்சின் செயலாளருக்கு பணித்துள்ளார்.

தற்போது 2395 வெற்றிடங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (38

### திருடிய வாழைகள் திருவிழாவில்

யாழ்சினியர்லேனில் உள்ள ஒருவரது வீட்டில் நின்ற வாழை மரங்களை நள்ளிரவு நேரத்தில் வெட்டிய சிலர் கலட்டியில் உள்ள ஆலயத் திருவிழாவுக்கு அலங்கரித்தனராம். இது பின்னர் வீட்டு உரிமையாளரால் கண்டுபிடிக்கப்பட்டு இதனைச் செய்தவர்களும் இனம் காணப்பட்டனர். (33)

### வளைகுடாப்...

போர் முனை எங்கும் திடீர் அமைதி ஏற்பட்டதாக அங்குள்ள போர் முனைச் செய்தியாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

முன்னதாக நேற்று அதிகாலையில் ஐ நாவின் குவைத் தொடர்பான 12 தீர்மானங்களையும் ஏற்றுக் கொள்வதாக ஈராக் ஐ நா பாதுகாப்புச் சபைக்கு அறிவித்திருந்தது.

யுத்த நிறுத்தம் தொடர்பாக நேற்றுக்காலை தொலைக்காட்சியில் உரையாற்றிய ஜனாதிபதி புஷ், ''குவைத் விடுவிக்கப்பட்டு விட்டது. ஈராக்கின் பெரும் பகுதி இராணுவம் அழிக்கப்பட்டு விட்டது. எமது இலக்கில் வெற்றியடைந்து விட்டோம். நாம் ஈராக்கிய மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. சதாம் ஹுசைனே நமது எதிரி. குவைத் மக்களின் மகிழ்ச்சியில் நாமும் பங்கு கொள்கிறோம். தற்போதைய யுத்த நிறுத்தம் நிரந்தரமாகுவது ஈராக்கிலேயே தங்கியுள்ளது'' எனக் குறிப்பிட்டார்.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து ஈராக் தலைநகர் பக்தாத் வழமை நிலைக்கு திரும்பியது. மக்களும் ஈராக்கிய இராணுவத்தினரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்குமாறு ஈராக்கியப் படைகளுக்கும் ஈராக் ராணுவ அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

### நெற்பண்ணை...

யோகநாதன்(7), சி. லோசினி(5) மற்றும் செ. செல்வராசா(24), சாந்தரூபி(7) ஆகியோர் படுகாயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மோகன் தம்பதியினர் அண்மையில் திருமணமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டிட இடிபாடுகளுக்கு இடையில் சடலங்கள் சிக்கியிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களின் தொகை பதினொன்று என பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (35, 74)

### போரினால்...

களிடம் இந்த நிதி பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் போர் ஆரம்பித்ததும் அவுஸ்திரேலியா அவசர உதவியாக 2 லட்சம் டாலரை முன்னர் வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார். (70)

### கிளிநொச்சி...

வலம் நடைபெறும். முடிவில் கூட்டமும் நடைபெறும்.

இதேபோல மன்னார் - நானாட்டானிலும் கண்டன ஊர்வலம் நடைபெறவுள்ளது. (ப-6, 74

### அழிந்த—

பரவலாக காணப்படுகிறது.

குவைத் மக்கள் நேற்று முன்தினம் மகிழ்ச்சியாக காணப்பட்டபோதிலும் நேற்று சோகமயமாக காணப்பட்டனர். தமது உறவினர்கள் பலர் கொல்லப்பட்டதையும் ஊனமாக்கப்பட்டதையும் அவர்கள் இப்போது முதற்தடவையாக அறிந்து வருகின்றனர்.

### மன்னார்...

ளதாக மாணவர் ஒன்றியம் அறிவிக்கின்றது.

யாழ் மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி தீவுப்பகுதி ஆகிய பிரதேசமாணவர்களின் பேரணிகள் அவ்வப்பிரதேசங்களிலேயே காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகுமென மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

வலிகாமம் பகுதியில் இப்பேரணி யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாகும் எனவும், இதில் ஆசிரியர் கலாசாலை மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்வார்களெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (71)

### இறுதியாக...

அமெரிக்க நேசஅணிப்படை டாங்கிகளும் இதில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தென்பகுதி ஈராக்கை துண்டிக்க யூப்பிரட்டீஸ் நதி அண்மையில் தரையிறங்கிய அமெரிக்கப் படை குறித்துத் தகவல் ஏதும் வெளியாகவில்லை.

எனினும் ஈராக்கின் எஞ்சிய படைகள் வடக்காக ஈராக் நோக்கி சென்றதாக செய்திகள் தெரிவித்தன.

### நிரந்தர யுத்த...

வெடிகள், கடற்கண்ணிகள் குவைத் எங்கும் உள்ளன என்பதை குறிப்பிடல், ஐ நாவின் குவைத் தொடர்பான தீர்மானங்களை ஏற்றல், எதிர்காலத்தில் கைத் தாக்குதல் நடாத்தப்படமாட்டாது என உறுதி அளித்தல், யுத்த நிறுத்தம் தொடர்பாக ஆராய ஈராக்கிய படைத்தளபதிகள் வளைகுடாவில் உள்ள அமெரிக்க படைத்தளபதிகளை சந்தித்தல் போன்ற நிபந்தனை ஈராக்கிற்கு விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குவைத் அரசும் ஈராக்கிடம் எண்ணெய்க்கிணறுகளை சேதமாக்கிய நஷ்டஈட்டை கோரியுள்ளது. இதற்கு ஈராக் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

### மடு அகதிகள்...

இங்குள்ள வெளிநாட்டு தொண்டர்ஸ்தாபன ஊழியர்களையும் வெளியேறுமாறு அரசு கேட்டுள்ளது.

### வடக்குக் —

படுத்தப்பட உள்ளனர்.

395 டாக்டர்களின் வெற்றிடங்களுக்கு 40 பேரை மட்டுமே அரசு நியமித்தமை குறிப்பிடத்தக்கது. (74)

### ஏப்ரலில்...

இப் பரீட்சையில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் மார்ச் 15-ம் திகதிக்கு முன்னர் அவ்வப்பகுதி பிராந்திய கல்விப் பணிப்பாளருக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

### மொனராகலை—

கடந்த 21ஆம் திகதி இங்குள்ள காட்டுப்பகுதியில் பொலிஸார் நடாத்திய முற்றுகையிலேயே இவர்கள் கைதானதாக அவர் குறிப்பிட்டார்.

இங்கு நடந்த மோதலில் ஜே. வி. பி. தலைவர்களில் ஒருவரான வர்ணதிலக என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் பெரும் கஞ்சா தோட்டம் ஒன்றும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, "லக்ஷ்மி பில்டிங்ஸ்" உள்ள அச்சகத்தில் 01-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.